DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 28.04.2025.

| | |
|---|---|
| Case No. | : CC. No. 84/2022 |
| Deposition of Witness for Prosecution | : PW5 |
| Name | : திரேந்திரா |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : xxxx |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. Chandar Rao, Grade III Bench Clerk, of this court, on 28.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(1–எதிரி ஆஜர், 2–3 எதிரிக்காக 355 BNS Act– பிரிவு படி மனு தாக்கல் செய்யப்பட்டது).**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், பக்கோடாபாயின் செல்லும் சாலையில் குடியிருந்து B.B.A படித்துக்கொண்டிருக்கிறேன். கடந்த 27.05.2022–ம் வருடம் இரவு 09.00 மணிக்கு நானும் எனது குடும்பத்தாரும் அக்கா வந்தனா, பிரம்தீப் சிங், சித்தப்பா சந்தோஷ் மற்றும் அக்காவின் குழந்தை ரஷ்மிகா ஆகியோர்கள் பிளவர்சோவிற்கு சென்றுவிட்டு திரும்ப கடைக்கு திரும்ப வந்துகொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி மற்றும் 2, 3 எதிரிகளும் வந்து உடனடியாக எங்களை தேவடியா, கன்டார ஓலி என்ற கெட்டவார்த்தையால் திட்டி எனது மாமாவின் சட்டை காலரை பிடித்து இழுத்து உருட்டு கட்டையாலும் கல்லாலும் அடித்தார்கள். நாங்கள் எந்தவித பிரச்சனையும் வேண்டாம் என்று திரும்பி காரில் வந்துகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி காரின் முன்பக்க கண்ணாடியை உடைத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் டிப்ளமோ ே◌ஹாட்டல் மேனஜ்மென்ட் மற்றும் BBA படித்துள்ளேன். பிரேம்தீப் எனது தாய்மாமா என்றால் சரிதான். வந்தனா பிரேம்தீப்பின் மனைவி

ஆவார். உங்களுக்கு பக்கோடாபாயின்ட், லேடீஸ்சீட் மற்றும் நாகலூர் செல்லும் வழியில் சாக்லெட் பெக்டரியும், வாசனை திரவியம் கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். லேடீஸ்சீட் உள்ள சாக்லெட் பெக்டரி எனது மாமா பிரேம்தீப்பிற்கு சொந்தமானது என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு லேடீஸ்சீட் அருகில் எங்களது சாக்லெட் கடை அருகில் எதிரிக்கு சாக்லெட் கடை அமைந்துள்ளதா என்றால் ஆமாம். எனது கடைக்கு ஆஜர் எதிரியின் கடைக்கும் இடையில் சுவர் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். எனது குடும்பம் சுமார் 30 வருடங்களாக சாக்லெட் கடை வைத்து நடத்திக்கொண்டு வருகின்றோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரி கடந்த 5 – 6 வருடங்களுக்கு முன்னால் சாக்லெட் கடை வைத்தார் என்றால் சரிதான். வியாபாரம் சம்மந்தமாக எனது மாமா பிரேம்தீப்பிற்கும் ஆஜர் எதிரிக்கும் அடிக்கடி சண்டை ஏற்படுமா என்றால் ஆமாம், வாய்தகராறு ஏற்படும். இதன் காரணமாக எனது மாமாவும் ஆஜர் எதிரியும் சரிவர பேசிக்கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தினத்தன்று மலர்கண்காட்சி முடித்து எங்கள் கடை அருகே நால்வரும் வந்தோம் என்றால் சரிதான். சம்பவதன்று இரவு சுமார் 09.30 மணிக்கு மேல் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தீர்களா என்றால் ஆமாம். அன்றைய இரவே போலீசார் எனது அக்கா, எனது மாமா மற்றும் சித்தப்பாவையும் என்னையும் விசாரணை செய்தார்கள். சுமார் இரவு 10.30 மணி வரை காவல் நிலையத்தில் இருந்தோம் அதன் பிறகு வீட்டிற்கு வந்துவிட்டோம். அன்றைய தினமே போலீசார் எங்கள் நால்வரையும் விசாரணை செய்தார்கள். மலர்கண்காட்சி முடித்து திரும்பி வந்துகொண்டிருந்தபோது ஆஜர் எதிரியின் மகன்களான இரண்டு மற்றும் மூன்றாம் எதிரிகள் இடதுபுறமாக 30 மீட்டர் இடைவெளியில் நின்றுகொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி கெட்டவார்தையால் திட்ட தொடங்கிய உடனே 2–3 எதிரிகள் வந்துவிட்டனர். 2–3 எதிரிகள் சம்பவ இடத்திலேயே தான் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது மாமாவின் சட்டை காலரை பிடித்து இழுத்ததாக போலீசார் விசாரணையின் போது சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி சம்பவத்தில் எனக்கு எவ்வித அடியும் படவில்லை என்றால் சரிதான். நீங்கள் எந்த பிரச்சனை வேண்டாம் என்று திரும்பி வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது எதிரிகள் கல்லால் அடித்தார்கள் என்ற விவரத்தினை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். புகாரானது எனது அத்தை சொல்ல சொல்ல எனது அம்மாவின் அம்மா எழுதினார்கள். எனது அம்மாவின் அம்மா புகார் தரும்போது காவல் நிலையம் வந்தார்களா என்றால் வரவில்லை. அவர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. லேடீஸ் சீட் அருகிலுள்ள கடையில் பொதுவாக கூட்டமாக இருக்குமா என்றால் ஆமாம். லேடீஸ் சீட்டில் உள்ள எங்களது கடைக்கு

அருகில் சுமார் 4–5 கடைகள் இருக்கும். உங்கள் கடைக்கு பின்புறமாக நிறைய வீடுகள் உள்ளதா என்றால் சரிதான் எனது வீடும் அங்குதான் உள்ளது. நீங்கள் மருத்துவமனை சென்றீர்களா என்றால் எனது மாமா, அத்தை மற்றும் சித்தப்பாவுடன் சென்றேன் அங்கு எனக்கு எவ்வித சிகிச்சையும் எடுத்துக்கொள்ளவில்லை. நீங்கள் சொல்வது போல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மலர்கண்காட்சி முடித்து வரும்போது லேடீஸ் சீட் அருகில் எங்களது வாகனம் விபத்துக்குள்ளனதால் ஏற்பட்ட காயத்தினை வைத்து ஆஜர் எதிரியின் மீது உங்களது மாமாவிற்கு உள்ள வியாபாரம் பகையின் காரணமாக பொய்யான புகாரானது கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரை படித்து பார்த்தீர்களா என்றால் எனக்கு தமிழ் படிக்க தெரியாது போலீசாரே அதை படித்து காண்பித்தனர். சம்பவம் நடந்த பின்பு மருத்துவமனைக்கு சென்று பின்பு காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு என் வீட்டிற்கு திரும்ப வந்துவிட்டேன். சுமார் இரவு 09.35 மணிக்கு ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். சம்பவ தினத்தன்று சுமார் 15–20 நிமிடமாக எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் சண்டை நடந்ததா என்றால் சரிதான். இரவு 09.30 மணிக்கு மலர்கண்காட்சி முடித்துவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தோம் என்றால் 09.00 மணியிலிருந்து 09.30 மணிக்கு வந்துகொண்டிருந்தோம். சம்பவ தினத்தன்று நீங்கள் ஊரிலேயே இல்லை என்றும், உங்களது மாமா கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அதனால் தான் சம்பவம் குறித்து உங்களால் சரியாக விவரிக்க முடியவில்லை என்றால் சரியல்ல. கார் கண்ணாடியானது விபத்தில் உடைந்தது என்று சொன்னால் சரியல்ல. கூர்மையான ஆயுதத்தினால் கார் கண்ணாடியானது உடைக்கப்பட்டது என்றால் அது கல்லாக இருக்கலாம். மேற்படியான கூர்மையான ஆயுதமானது கம்பியோ அல்லது கூர்மையான தன்மையுடைய பொருட்கள் அல்ல என்று சொன்னால் சரிதான். 2–3 எதிரிகள் உங்களுக்கு நன்றாக தெரிந்தவர்களா என்றால் 2–ம் எதிரியை நன்கு தெரியும். எனது மாமாவிற்கும் எனது அக்காவிற்கும் 2–3 எதிரிகளை நன்றாக தெரியுமா என்றால் தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கின்றது. சம்பவ தினத்தன்று இரவு நான் எனது மாமாவின் வீட்டில் தங்கவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு சம்பவத்தின் மூலம் உடம்பில் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். உங்கள் மீது இருசக்கர வாகனத்தை கொண்டு உங்களது காலில் மோதி காயத்தை ஏற்படுத்தினார்களா என்றால் இல்லை ஆஜர் எதிரி சம்பவ இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தார் எனது காலில் மீது மோதவில்லை. சம்பவம் நடந்த தினத்தன்று போலீசாரிடம் புகார் கொடுத்து அது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்ததற்கு பின்னிட்டு காவல் நிலையம் சென்றீற்களா என்றால்

நானும், எனது அக்கா, மாமா மற்றும் சித்தப்பா ஆகியோர்கள் மறுநாள் காலை 10.30 மணிக்கு இரவு கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுத்தார்களா என்பதை தெரிந்துகொள்ள காவல் நிலையம் சென்றோம். அப்போது போலீசார் எங்களை மீண்டும் விசாரணை செய்தார்கள். அதற்கு பின்னிட்டு என்னை போலீசார் மீண்டும் விசாரிக்கவில்லை. மீண்டும் நான் மேற்படி சம்பவம் சம்மந்தமாக காவல் நிலையம் செல்லவில்லை. எனது கொள்ளு தாத்தா பவானி சிங் காலத்திலிருந்தே சுமார் 100 வருடங்களாக நீங்கள் ஏற்காட்டில் தான் வசித்து வருகீறிர்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி உங்களது மாமாவின் கடைக்கு பக்கத்தில் கடை வைத்து நன்றாக வியாபாரம் நடைபெற்று வருவதன் காரணமாக பகை ஏற்பட்டு இதுபோன்ற ஜோடித்து பொய் புகார் அளித்து தற்போது நீதிமன்றத்தில் அதற்கு ஏற்றால் போல் பொய்யாக சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரிகள் யாரையும் அடிக்கவில்லை, கெட்ட வார்த்தையால் பேசவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. R. Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.